2020 மார்ச் 18]

செய்யும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை அவர்கள்.

திரு. ஐ.எஸ். இன்பதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது அம்மா அவர்களுடைய அரசு. கருணை மிகுந்த அரசு. இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வெளியிட்டிருக்கின்ற அறிவிப்பு எங்களுடைய தொகுதி மக்களுடைய, மீனவர்களுடைய கண்களில் நிச்சயம் ஆனந்தக் கண்ணீரை வரவழைக்கும். கூடங்குளம் அணு உலை விரிவாக்கம் என்பது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. எனவே, Corporate Social Responsibility Fund எனப்படுகின்ற அந்த CSR நிதியைப் பெற்று அந்த இரண்டு தூண்டில் வளைவுகளையும் சீரமைக்க வேண்டும். அதுபோல கூட்டப்புளியிலும், கூடுதாழையிலும் தூண்டில் வளைவு அமைக்க மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவாதம் தந்திருந்தார்கள், உறுதி தந்திருந்தார்கள். இது அம்மா அவர்களுடைய அரசு. எனவே, அதனை நிச்சயம் அமைத்துத் தருவேன் என்று கூறியிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய கண்ணீர் வணக்கத்தைச் சமர்ப்பித்து, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 120, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ப. சரவணன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

120—

கைத்தறிப் பூங்கா

***51540—டாக்டர் ப. சரவணன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பரங்குன்றம் தொகுதி, திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம், நிலையூர் மற்றும் கைத்தறி நகரில் வசிப்பவர்களுக்கு கைத்தறிப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2020 மார்ச் 18

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருப்பரங்குன்றம் தொகுதி, திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம், நிலையூர் கைத்தறி நகரில் வசிக்கும் மக்களுக்கு கைத்தறிப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா என மாண்புமிகு திருப்பரங்குன்றம் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளார்கள். மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் தொகுதிக்குட்பட்ட நிலையூர் மற்றும் கைத்தறி நகர் பகுதிகளில் கைத்தறிப் பூங்கா அமைப்பதற்கான முன்மொழிவு எதுவும் அரசின் பரிசீலனையில் தற்சமயம் இல்லை. எனினும், தொழில் பூங்கா தொடங்க தொழில்முனைவோர்கள் முன்வருவார்களாயின் அப்பகுதியில் ஜவுளிப் பூங்கா அமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ப. சரவணன் அவர்கள்.

டாக்டர் ப. சரவணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்திற்கெல்லாம் முன்மாதிரியான திட்டமாக நெசவாளர் காப்பீட்டுத் திட்டத்தைத் தந்தவர் தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுக்கு எனது புகழ் வணக்கம். இனமான பேராசிரியர் அவர்களுக்கும் எனது புகழ் வணக்கம். எங்களது கழகத் தலைவர் அவர்களை வணங்குகிறேன். என்னுடைய தொகுதியான திருப்பரங்குன்றம் தொகுதியில், திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட நிலையூர் மற்றும் கைத்தறி நகருக்கு ஒரு சிறிய அளவிலான கைத்தறிப் பூங்கா கேட்டிருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தற்போது அதற்கு வாய்ப்பு இல்லை என்றும், அதனை அரசின் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வதாகவும் கூறியிருக்கின்றார். அதற்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் குறிப்பிடக்கூடிய இந்தக் கைத்தறி நகர் பகுதியைச் சார்ந்த மக்கள் நான்கு தலைமுறையாக 1600 ஆம் ஆண்டுகளில் குஜராத் மாநிலம், சௌராஷ்டிரபுரம் என்ற ஓரிடத்திலிருந்து குடிபெயர்ந்து, இங்கு வந்து குடியமர்த்தப்பட்டனர். இந்தப் பகுதியில் தற்போது அவர்களுடைய வாழ்வாதாரம் நலிவடைந்துள்ளது. நெசவாளர்களின்

2020 மார்ச் 18]

வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக நம் அனைவருக்கும் தலைவர், பேரறிஞர் அண்ணா அவர்கள் அந்தக் காலத்தில் தோளில் துண்டு அணிந்தார் என்று நாம் கேள்விப்பட்டிருக்கின்றோம். அந்தவகையில் அவரைத் தொடர்ந்து அவரது அன்புத் தம்பிகளான தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களும், புரட்சித் தலைவர் அவர்களும் பல்வேறு நலத் திட்டங்களை இத்தகைய நெசவாளர்களுக்காகச் செய்திருக்கின்றார்கள். அதனடிப்படையில் இப்போது அரசு தயவுகூர்ந்து பரிசீலனையில் எடுத்து அந்தப் பகுதி மக்களுக்கு இதனைச் செய்துதர வேண்டும். ஏனென்றால் இன்றைய அளவில் அவர்கள் தனியார் சொசைட்டிமூலம்தான் தங்களுடைய பொருட்களை விற்கக்கூடிய நிலை இருக்கின்றது. அவர்களுக்கு வேண்டிய மூலப்பொருளான பாவு ரூ.10,000/–க்கு கிடைக்கிறது. அதில் அவர்களுடைய செலவு எல்லாம் போக, மாதம் 10 சேலைகளைத்தான் அவர்களால் நெய்ய முடிகிறது. ஒரு சேலைக்கு 600 ரூபாய் என்ற வீதத்தில் மாதம் 6,000 ரூபாய், 7,000 ரூபாய் கிடைக்கின்ற வருமானத்தை வைத்து அவர்கள் தற்போது வசித்து வருகிறார்கள். எனவே, அவர்களுடைய வாழ்வாதாரம் நலிவடைந்து, பலர் வேறு வேலைகளுக்குச் செல்லக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே, அந்தத் துறையைக் காப்பாற்றும்வண்ணம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவுகூர்ந்து பரிசீலனையில் எடுத்து, அந்தப் பகுதியில் ஒரு கைத்தறிப் பூங்காவை அமைத்துத் தர வேண்டும் என்ற எங்களது கோரிக்கையை வைக்கின்றேன்.

முற்பகல் 10–30

மேலும், இவர்களின் எண்ணிக்கை வெறும் 1,000, 2,000 மட்டும் கிடையாது; ஒரு சட்டமன்றத் தொகுதியின் வெற்றியைத் தீர்மானிக்கக்கூடிய அளவில் அவர்கள் இருக்கிறார்கள். பாராளுமன்றத் தொகுதியின் வெற்றியைத் தீர்மானிக்கின்ற அளவில் அவர்கள் மதுரை மாவட்டத்தில் பரந்து விரிந்து இருக்கிறார்கள். ஆதலால், இத்தகைய பூங்காக்கள் அவர்களுடைய வாழ்வாதாரத்தை மேலும் சிறக்க வைக்கும் என்ற ஒரு தாழ்மையான கோரிக்கையை வைத்து, அமர்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

[2020 மார்ச் 18

சொல்கிறபோது, அந்தப் பகுதியில் இருக்கிற நெசவாளர் பெருமக்கள் பொருளாதாரத்தில் நலிவடைந்திருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட்டார்கள். அங்கே 7 நெசவாளர் சங்கங்கள் இயங்கி வருகின்றன; 3,200 நெசவாளர்கள் கைத்தறித் தொழிலை மேற்கொண்டிருக்கிறார்கள். அவர்களில் 400 நபர்கள் மட்டுமே கைத்தறி சங்கத்தினுடைய உறுப்பினர்களாக இருக்கிறார்கள். மீதமிருக்கிற 2,800 நபர்கள் தனியார் அமைப்பில் நெசவாளர்களாக இருக்கிறார்கள். இந்தக் கைத்தறி சங்கத்தில் உறுப்பினர்களாக இருக்கிற அந்த 7 சங்கங்களுமே இலாபத்தில் இயங்குகின்ற சங்கங்களாக இருக்கின்றன. அப்படியிருந்தும்கூட, அங்கே பூங்கா அமைப்பதற்கான ஒரு கூட்டம் அரசு அலுவலர்களால் ஏற்பாடு செய்யப்பட்டு, நடத்தப்பட்டது. பூங்கா அமைப்பதற்கான முதலீடுகளைப் பற்றி அவர்களிடத்தில் எடுத்து வைக்கப்பட்டது. அதற்குத் தேவையான நிலம் பற்றி அவர்களிடத்தில் பேசப்பட்டது. அவர்கள், எங்களுக்கு எல்லாவிதமான வசதிகளும் தாராளமாகக் கிடைக்கின்றன. தொழில் பூங்கா ஏற்படுத்துவதற்கான முதலீட்டினை அளிப்பதற்கும், நிலம் வழங்குவதற்கும் எங்களுக்கு வசதி இல்லை. எனவே, இந்தப் பூங்கா எங்களுக்கு இப்போதைக்கு தேவையில்லை என்று அந்த உறுப்பினர்களே அரசு அதிகாரிகள் கூட்டிய கூட்டத்தில் தெளிவுபடத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்களுடைய முன்னாள் முதலமைச்சர், எங்கள் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நெசவாளர் பெருமக்களுடைய வாழ்க்கையில் நம்பிக்கையையும், ஒளியையும் ஏற்றி வைத்தவர். இந்திய அளவில் 61 பூங்காக்கள் செயல்பட்டு வருகின்றன. அதில் 8 பூங்காக்கள் தமிழ்நாட்டில் மிகச் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகின்றன. எவ்வளவு உதவி செய்ய முடியுமோ, அந்த அளவுக்கு, 200 கோடி ரூபாயை வட்டியில்லாமல் கொடுத்து, 178 கோடி ரூபாயை அவர்களுக்கு நிதியுதவியாகக் கொடுத்து உதவி செய்தவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். ஒருங்கிணைந்த பூங்காக்களை உருவாக்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உதவியிருக்கிறார்கள். அரசு தயாராக இருக்கிறது. நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் முன்னின்று, அந்தப் பூங்கா அமைப்பதற்கான கொள்கை வழிப்படி, தொழில் முனைவோரை ஊக்கப்படுத்தி, அரசுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அதற்கான முன்மொழிவுகளை அனுப்புவார்கள் என்று சொன்னால்,

2020 மார்ச் 18]

அரசு பரிவோடு பரிசீலனை செய்ய காத்திருக்கிறது. பெரிய அளவில் பூங்கா அமைப்பதானாலும் சரி அல்லது சிறிய அளவில் பூங்கா அமைப்பதானாலும் சரி அல்லது மிகச் சிறிய அளவிலே பூங்கா அமைப்பதானாலும் சரி அரசு தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ப. சரவணன் அவர்கள்.

டாக்டர் ப. சரவணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியபடி 400–க்கு குறைவானவர்களே அரசு society–ல் உறுப்பினர்களாக இருக்கிறார்கள்; 3,000–க்கு மேற்பட்டோர் அதில் member ஆக இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினராக கைத்தறி பூங்கா வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை நான் இங்கே வைக்கின்றேன் என்றால், மக்களை நான் சந்தித்தபோது அவர்கள் வைத்த கோரிக்கையை, அவர்களுடைய பிரதிநிதியாகத்தான் இங்கே சட்டமன்றத்தில் வைக்கின்றேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் அவர்களை அணுகி, அரசு விதிகளுக்குட்பட்டு அங்கே பூங்கா அமைப்பதற்கான வழிமுறைகள் என்னென்ன இருக்கின்றனவோ அவற்றைக் கடைப்பிடித்து, செய்வதற்கான வழிமுறையைச் செய்வேன் என்று கூறி, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கின்றேன். நன்றி.

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய விருதுநகர் மாவட்டத்தில் சிறிய அளவில் கைத்தறி நெசவாளர்கள் ஒரு தறி மற்றும் இரண்டு தறிகள் வைத்திருப்பவர்கள்; திருப்பூர் மாதிரி அதிகம் இல்லாமல் ஒரு powerloom, இரண்டு powerloom வைத்திருக்கின்ற குடிசைத் தொழிலாக, விருதுநகர் மாவட்டத்தில் அருப்புக்கோட்டை, சிறுகுளத்தூர், ராஜபாளையம் ஆகிய 3 பகுதிகளிலும் சிறிய அளவில் இந்தத் தொழில் நடந்து கொண்டிருக்கிறது. இவற்றில் கையால் சாயம் செய்யக்கூடிய சின்னச் சின்ன தொழிற்சாலைகள் இருக்கின்றன. திருப்பூர் போன்று

உப்பு சேர்த்து செய்யக்கூடிய பெரிய தொழிற்சாலைகளாக இல்லை. சுற்றுச்சூழல் துறையிலிருந்து இந்த சாயத் தொழில்களுக்கெல்லாம் ஒரு ஆபத்து வரக்கூடிய அளவிற்கு 'அதை மூடுங்கள், அதைத் திறங்கள்' என்று சொல்லி, அந்தப் பிரச்சினைகள் ஒரு பக்கம் நடந்துகொண்டே இருக்கின்றன. பெரிய அளவில் உப்பு சேர்த்து சுற்றுச்சூழலைப் பாதிக்கக்கூடிய அளவிற்கு உள்ள இடங்களில் சுற்றுச்சூழல் துறை மூலமாக அதை நிறுத்தினால் பரவாயில்லை. அப்படி இல்லையென்றால், நீங்களும் மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களும் கலந்து பேசி, அரசாங்கத்திலிருந்தே சிறிய அளவில் அந்த சாயத் தொழிற்சாலைகளை 'Zero Liquid Discharge facililty' உடன் இயங்கக் கூடிய சாயத் தொழிற்சாலையாக மாற்றி அமைக்க வேண்டும். அவற்றில் உறுப்பினராகச் சேர்ந்துகொண்டு, அரசாங்கம் சொல்கிற பணத்தைக் கட்டுவதற்கு அவர்கள் தயாராக இருக்கிறார்கள். சிறிய அளவில் தொழில் செய்கிற அவர்கள், பெரிய முதலீட்டுத் தொகையினை வைத்து, அவ்வாறு தொழிற்சாலைகள் தொடங்குவதற்கு முடியாத சூழ்நிலை இருக்கிறது. சுற்றுச்சூழல் துறைமூலம் மூடுவது சுலபம். ஆனால், அந்தத் தொழிலைக் காப்பாற்ற வேண்டிய இடத்தில் மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் இருக்கிறீர்கள். மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களும், நீங்களும் கலந்து பேசி அதற்கு ஒரு முடிவு செய்து, அரசாங்கம் மூலமாகவே அதைச் செய்து, இவர்களையெல்லாம் பங்குதாரர்களாகச் சேர்க்கக்கூடிய அந்தப் பணியை மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டது போல், 3 தொழிற்கூடங்கள், 2 ஏக்கர் நிலம் இருந்தாலே போதும், ஒரு சாயக் கழிவு சுத்திகரிப்பு நிலையத்தை நாம் ஏற்படுத்திக்கொள்ளலாம். அதற்கான உட்கட்டமைப்பு வசதிகளைச் செய்துகொள்ள 50 சதவிகித செலவுத் தொகையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மானியமாக உங்களுக்கு வழங்குகிறது. அது மட்டுமல்லாமல், அந்தத் தொகை குறைவாக இருக்கும்பட்சத்தில், 2½ கோடி ரூபாயை அரசு மானியமாக வழங்குகிறது. இது, ஒரு மிக மிகச் சிறிய சாயச் சாலையை உருவாக்கிக் கொள்வதற்காக அரசு

2020 மார்ச் 18]

செய்திருக்கிற ஒரு மிகப் பெரிய உதவியாகும். அதை மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் பகுதியில் இருக்கக்கூடிய நெசவாளர் பெருமக்களுக்குச் சொல்லி, அந்த ஏற்பாட்டைச் செய்துகொள்ளலாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 121, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. பாஸ்கர், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

121—

கட்டடம்

***12159—திரு. கே.பி.பி. பாஸ்கர்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மண்டல இணை இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர் அலுவலகங்களுக்குக் கால்நடை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலேயே கட்டடங்கள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டத்தில் கால்நடை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், ஒருங்கிணைந்த மண்டல இணை இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர் அலுவலகங்களுக்குக்கான கட்டடங்களைக் கட்டுவது அரசின் பரிசீலனையில் இல்லை. கால்நடை பராமரிப்புத் துறை மூலமாக ஒருங்கிணைந்த மண்டல இணை இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர் அலுவலகங்களுக்கான கட்டடங்களைக் கட்டுவதற்காக நாமக்கல் மாவட்டம், எர்ணாபுரத்திலுள்ள புல எண் 47/2B–ல், 85 சென்ட் நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. 2020–2021 ஆம் ஆண்டில் நாமக்கல் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த மண்டல இணை இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர் அலுவலகங்களுக்கான கட்டடங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களது அனுமதியுடன் ரூ.2 கோடியே 25 இலட்சம் செலவில் கட்டப்படும் என 2020–2021 ஆம் ஆண்டிற்கான கால்நடை பராமரிப்புத் துறையின் மானியக்